வாரந்தோறும்... வாசல்தோறும்...
இதுவரை 6 லட்சம் பிரதிகளுக்கு மேல் இலவசமாக வழங்கிவரும்
மறைமலை முரசு இதழில்
விளம்பரம் செய்து பயனடைவீர்!
தொடர்புக்கு:
9444112294

TC NO. TNTAM/24613 RNI.NO. TNTAM/2023/88613

# மறைமலை முரசு

S.ஞானவேல்
ஆசிரியர்-வெளியீட்டாளர்

MARAIMALAI MURASU - TAMIL WEEKLY

தமிழ் வார இதழ்

CHENGALPATTU | VOL: 03 | ISSUE: 23 | 22.02.2026 - 28.02.2026 | VISUVAVASU - MAASI: 10 | RAMZAN : 04 | PRICE: RS.5/-

செங்கல்பட்டு | மலர்: 03 | இதழ்: 23 | 22.02.2026 - 28.02.2026 | விசுவாவசு - மாசி : 10 | ரம்ஜான் : 04 | விலை: ரூ.5/-

# மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி : உரிமைக் குரல்







"இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம்" இது வெறும் அரசியல் சாசன வரிகள் அல்ல; கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம், மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடையாளம். இந்த அடையாளத்தைச் சிதைக்காமல் காக்கக்கூடிய ஒரே மந்திரச் சொல்: மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்பே விதைத்த இந்தச் சிந்தனை, இன்று முன்பை விட அதிகத் தேவையுள்ள ஒன்றாக மாறியிருக்கிறது. ஒரு நாட்டின் தலைநகரில் அமர்ந்துகொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு கிராமத்தின் கல்வி, உணவு மற்றும் கலாச்சாரத்தைத் தீர்மானிப்பது உண்மையான ஜனநாயகம் ஆகாது. அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே இந்த முழக்கத்தின் அடிப்படை.

நீதிபதி குரியன் ஜோசப் குழுவின் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, மாநில சுயாட்சிக்கான புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்துள்ளது. அதில் இடம்பெற்றுள்ள சில முக்கியக் கோரிக்கைகள் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை உரக்கச் சொல்கின்றன:

கல்வி என்பது மாநில உரிமை: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தனித்துவமான கல்விமுறை உண்டு. 'நீட்' போன்ற பொதுவான தேர்வுகள் கிராமப்புற மாணவர்களின் கனவைச் சிதைக்கின்றன. எனவே, கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதே சமூக நீதிக்கு அழகாகும்.

நிதிச் சுதந்திரம்: மாநிலங்கள் உழைத்து ஈட்டும் வருவாயில் பெரும்பகுதியை மத்திய அரசு எடுத்துக்கொண்டு, நிதி ஒதுக்கீடு செய்யும் முறையை மாற்ற வேண்டும். ஜி.எஸ்.டி வரி பகிர்வில் மாநிலங்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

பன்முகத்தன்மையே இந்தியாவின் பலம்: இந்தியா என்பது பல்வேறு மொழிகள், மதங்கள் மற்றும் கலாச்சாரங்கள் இணைந்த ஒரு கதம்பம். மாநிலங்கள் வலிமை பெற்றால் மட்டுமே இந்தியா ஒரு வலிமையான நாடாக உலக அரங்கில் நிமிர முடியும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாநிலங்களே ஒரு ஆரோக்கியமான ஒன்றியத்திற்கு அடித்தளம்.

மத்திய அரசு என்பது மாநிலங்களுக்கு எஜமானன் அல்ல; அது ஒரு ஒருங்கிணைப்பாளர் மட்டுமே. மாநிலங்களின் உரிமைகளை மதித்து, அவற்றுக்கு உரிய சுயாட்சியை வழங்குவதே உண்மையான கூட்டாட்சி. தமிழகம் எடுத்து வைத்துள்ள இந்த அடிவைப்பு, ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் மாநில உரிமைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும்.




உச்ச நீதிமன்றத்தில் தமிழ் வழக்கறிஞர்கள் இலக்கிய கழகத்தின் 24வது கருத்தரங்கம்
பக்கம் 3ல்

மறைமலை நகர் சேவை மையம்
COLOUR & B/W XEROX AND BINDING
Patta Apply, EC, FMB Sketch, Chitta Download, State and Central Govt All Certificate, Rental Agreement, E-Stamp, Pan Card, (Authorised Agent) Aadhar Card Add. Change, Speed Post, Pensioner Life Certificate etc., GST Registration, Monthly Returns Filing, Income Tax Filing, Startup India Registration, Company Incorporation, Partnership Deed Registration
7200073980, 04461381709

# மாவட்ட முரசு

## செட்டிபுண்ணியம் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல்:



செங்கல்பட்டு மாவட்டம் மகேந்திரா சிட்டி எதிரே உள்ள செட்டிபுண்ணியம் ஊராட்சியில் முறையான பேருந்து வசதி இல்லாததால், அப்பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் சுமார் 4 கி.மீ தூரம் நடந்தோ அல்லது இருசக்கர வாகனங்களையோ நம்பியே பயணிக்க வேண்டிய சூழல் உள்ளது. மகேந்திரா சிட்டியில் பணிபுரியும் வெளிமாநிலத் தொழிலாளர்கள் தங்கியுள்ளதால் இப்பகுதியில் தள்ளுவண்டி கடைகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன. மேலும், தென் மாவட்டங்களுக்குச் செல்லும் ரயில்களுக்காக அங்குள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால், மாலை நேரங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் மிகுந்த சிரமத்திற்குள்ளாகும் பொதுமக்கள், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாலை நேரங்களில் கூடுதல் போலீசாரை நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மின்சார ரயில் கால அட்டவணை மாற்றம்

எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெறும் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக, பிப்ரவரி 20 முதல் ஏப்ரல் 5 வரை (45 நாட்கள்) கீழ்க்கண்ட தற்காலிக அட்டவணைப்படி ரயில்கள் இயக்கப்படும்:



**சென்னை கடற்கரை தாம்பரம்:**
காலை: 3.30, 8.05, 8.30, 8.45, 9.05, 10, 10.40, 11, 11.15, 11.45,
மதியம் : 12, 1.20, 2.30
மாலை/இரவு: 3.35, 6, 9.05, 11, 11.25, 11.50, 12.05

**சென்னை கடற்கரை செங்கல்பட்டு:**
காலை: 3.45, 4, 4.20, 4.40, 5.20, 5.35, 6.15, 6.40, 6.55, 9.20, 9.45, 10.30, 11.30
மதியம்: 12.20, 12.40, 1.45, 2.10
மாலை/இரவு: 3.10, 4.05, 4.25, 5, 5.15, 5.30, 5.45, 6.25, 7.05, 7.40, 8.15, 8.30, 8.45, 9.25, 9.45, 10.10, 10.35

**தாம்பரம் சென்னை கடற்கரை:**
காலை: 3.30, 3.50, 4.10, 4.30, 5.10, 6.10, 9.45, 10.30,
மதியம்: 12.30, 1.35, 2.15
மாலை/இரவு: 3.30, 4.10, 4.25, 5.30, 6.40, 12.15

**கடற்கரை காஞ்சிபுரம்:** காலை 5, இரவு 7.20

**கடற்கரை திருமால்பூர்:** காலை 7.05, மதியம் 2.50, இரவு 8

**கடற்கரை அரக்கோணம்:** மதியம் 1, மாலை 6.15 (விரைவு), 6.50

**எழும்பூர் தாம்பரம்:** காலை 9.40, 9.50, 11, 11.10, மதியம் 2.35, 3.35, 4.25, 5.35, இரவு 7.30

**எழும்பூர் செங்கல்பட்டு:** காலை 9.25, மாலை 6.25

**செங்கல்பட்டு எழும்பூர்:** காலை 7.40, 8.45 (விரைவு)

**குறிப்பு:** ஏ.சி. மின்சார ரயில்கள் வழக்கமான கால அட்டவணைப்படியே இயக்கப்படும். பயணிகள் இந்த மாற்றங்களைக் கவனித்துத் தங்கள் பயணத்தைத் திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## 'வள்ளலாரின் நோக்கங்களைச் சிதைக்க அனுமதிக்க மாட்டோம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!

சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற 'அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பசிப்பிணியை போக்க வழிவகை செய்த வள்ளலாரின் உன்னத நோக்கங்களையும், பண்பாட்டு அடையாளங்களையும் சிதைக்க நினைப்பவர்களை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என உறுதிபடத் தெரிவித்தார். விழாவில் மாநாட்டு ஆய்வு மலரை வெளியிட்ட அவர், வடலூரில் 12.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவமனை மற்றும் பக்தர்கள் தங்கும் விடுதிகளைத் திறந்து



வைத்ததோடு, சென்னையில் 'வள்ளலார் ஆய்வு மையம்' அமைக்கப்படும் என்ற முக்கிய அறிவிப்பையும் வெளியிட்டார். திராவிட மாடல் அரசு வள்ளலார் காட்டிய தனிப்பெருங்கருணை வழியில் காலை உணவுத் திட்டம் முதல் தாயுமானவர் திட்டம் வரை பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்வடிவில் நடைமுறைப்படுத்தி வருவதாக நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட முதல்வர், தமிழ்ச் சமூகத்தின் புரட்சியாளரான வள்ளலாரின் கோட்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்பதே அரசின் கடமை எனத் தனது உரையில் வலியுறுத்தினார்.

## டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பும்

தமிழகம் தழுவிய அளவில் டாஸ்மாக் ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் மற்றும் முறையான ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த பிப்ரவரி 18ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு டாஸ்மாக் தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்திருந்தன. எனினும், தமிழக அரசு மற்றும் அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, இந்த வேலைநிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

3 மணி நேர கடையடைப்பு: மதுப்பிரியர்கள் திண்டாட்டம் ஊழியர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாததைக் கண்டித்து, கடந்த வாரம் தமிழகம் முழுவதும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சுமார் 70% கடைகள் அடைக்கப்பட்டன. இதனால் சென்னையின் பல இடங்களில் மதுக்கடைகள் திறக்கப்படுவதற்காக மதுப்பிரியர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததோடு, சில இடங்களில் போலீசாருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

திருநெல்வேலி: குடியிருப்புப் பகுதியில் மதுக்கடைக்கு எதிர்ப்பு திருநெல்வேலி மாவட்டம் ராமையன்பட்டி அருகே எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் புதிதாக டாஸ்மாக் கடை திறக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பள்ளி மாணவிகள் மற்றும் பெண்கள் அதிகளவு பயன்படுத்தும் பாதையில் மதுக்கடை அமைவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறி, கிராம மக்கள் சாலை மறியல்




போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர்: பெண்கள் மீது வழக்குப்பதிவு பாமக கண்டனம் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே கல்லாத்தூரில் உள்ள இரண்டு டாஸ்மாக் கடைகளை அகற்றக் கோரிப் போராடிய பெண்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதற்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். "மக்களின் நியாயமான கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல், போராடுபவர்களை விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்துவது ஜனநாயகம் ஆகாது" என அவர் சாடியுள்ளார்.

காலி பாட்டில்கள் திட்டம்: ஊழியர்கள் கடும் எதிர்ப்பு மதுபாட்டில்களுக்கு தலா 10 கூடுதல் விலையாகப் பெற்று, காலி பாட்டில்களைத் திரும்ப ஒப்படைத்தால் அந்தப் பணத்தை வழங்கும் திட்டத்திற்கு ஊழியர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். போதிய ஆட்கள் பலம் இல்லாத நிலையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது கூடுதல் பணிச்சுமையை உருவாக்குவதாகக் கூறி அம்பத்தூர் எஸ்டேட் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



# அரசியல் முரசு

## எம்ஜிஆர் பெயரை சொல்பவர்கள் எல்லாம் எம்ஜிஆர் ஆக முடியாது எடப்பாடி பழனிசாமி பேச்சு

சென்னை ஆல்பர்ட் திரையரங்கில், டிஜிட்டல் முறையில் மெருகேற்றப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் காவியப் படைப்பான 'இதயக்கனி' திரைப்படத்தின் 225வது நாள் வெற்றி விழாவில் கலந்துகொண்ட அ.தி.மு.க பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி, "அரசியலில் எம்.ஜி.ஆர் பெயரைச் சொல்பவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது" என அதிரடியாகத் தெரிவித்தார். சினிமாவில் மட்டுமின்றி, அரசியல் களத்திலும் 'எம்.ஜி.ஆர்' என்ற பெயர் இன்றும் ஒரு மந்திரச் சொல்லாகவே விளங்குவதாகவும், அவர் ஒரு வரலாற்று அதிசயம், அவருக்கு நிகர் அவரேதான் என்றும் திட்டவட்டமாகக் கூறினார். 1975ஆம் ஆண்டு வெளியான இத்திரைப்படம் 51 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ரீரிலீஸ் செய்யப்பட்டு 225 நாட்களைக் கடந்து ஓடிக்கொண்டிருப்பது எம்.ஜி.ஆரின் குறையாத மக்கள் செல்வாக்கிற்கு மாபெரும் சாட்சி எனப் பெருமிதம் தெரிவித்தார். மேலும், திரையில் எம்.ஜி.ஆரைப் பார்த்தவுடன் தொண்டர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடிய எழுச்சியைக் கண்டபோது, எம்.ஜி.ஆரே நேரில் வந்ததைப் போன்ற



நெகிழ்ச்சியான உணர்வு தமக்கு ஏற்பட்டதாகவும் அவர் கூறினார். கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்ட இவ்விழா, மக்கள் மனதிலும் அரசியல் களத்திலும் எம்.ஜி.ஆர் இன்றும் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார் என்பதை ஆணித்தரமாக உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

## மிசாவா? தடாவா? முதல்வர் ஸ்டாலின் ஆவேச பேச்சு




உயிரே போனாலும் தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்குகுரல் கொடுப்போம் என முதல்வர் ஸ்டாலின் பேசியுள்ளார். மதுரை உத்தங்குடியில் நடைபெறும் தெற்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ. பெரியசாமி, பி. மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், "மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகளிர் உரிமைத் தொகையை மத்திய அரசு நிறுத்தப் பார்த்தது. ஆனால், காலையிலேயே ரூ. 5,000 என்ற ஆச்சரியம் கொடுத்ததுமே மத்திய அரசுக்குப் பயந்து மக்கள் உடனே வங்கிக்குச் சென்று தங்கள் பணத்தை எடுத்துக் கொண்டனர்.

மக்களுக்காக கொடுத்தால் அது திமுக. மக்களிடம் இருந்து எடுத்துக் கொண்டால் அது மத்திய அரசு. நமது மாநிலம் வரலாறு காணாத வளர்ச்சி அடைத்திருக்கிறது. அது எதிரிகளின் கண்ணை உறுத்துகிறது. வாக்காளர்களை கனிவாக பணிவாக நடத்த வேண்டும். மக்கள்தான் எஜமானர்கள்; நாம் சேவகர்கள்.

பழனிசாமி போல நாங்கள் கோழைகள் அல்ல; ஆட்சியல்ல, பதவியல்ல.. உயிரே போனாலும் கவலைப்படாமல் தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்கு குரல் கொடுப்போம். வழக்குப் போடுவியா போடு... நாங்கள் பார்க்காத மிசாவா? தடாவா?" எனப் பேசினார் முதல்வர் ஸ்டாலின்.

## காரைக்குடியில் சீமான் போட்டி!

திருச்சியில் நடைபெறும் நாம் தமிழர் கட்சியின் மாநாட்டில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், 234 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

தமிழ்நாட்டில் பேரவைக்கான தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில், திமுக, அதிமுக, தவெக உள்ளிட்ட கட்சிகள் பிரசாரம், மக்கள் சந்திப்புக் கூட்டம், மாநாடு எனத் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றன.

இந்த நிலையில், திருச்சி மாவட்டம், ஆலம்பட்டிபுதூரில் நாம் தமிழர் கட்சி சார்பில் 'மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு' நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் 234 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிமுகப்படுத்தினார். மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 117 பெண் மற்றும் 117 ஆண் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். 234 தொகுதிகளில் 40 பொறியாளர்கள், 33 வழக்கறிஞர்கள், 15 மருத்துவர்கள் இடம் பெற்றுள்ளனர். சீமான் தனது சொந்த மாவட்டமான சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி தொகுதியில் களமிறங்கியுள்ளார்.

அவரைத்தவிர்த்துஇடும் பாவனம் கார்த்திக், நாகை மாவட்டம் வேதாரண்யம் தொகுதியிலும், திரைப்பட இயக்குநர் களஞ்சியம், ஆயிரம் விளக்கு தொகுதியிலும், வீரப்பன் மகள் வித்யாராணி மேட்டூர் தொகுதியிலும் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கும்மிடிப்பூண்டியில் வழக்குரைஞர் ஸ்ரீதர், பொன்னேரியில் ராஜாத்தி, திருத்தணியில் சந்திரன், திருவள்ளூரில் செந்தில்குமார், பூந்தமல்லியில் மேகலா, ஆவடியில் புனிதா, மதுரவாயல் ரேவதி,




அம்பத்தூர் சிலம்பரசன், மாதவரம் ருத்திகா ஏழுமலை, திருவொற்றியூர் சத்யா பாஸ்கர், சென்னை ஆர்.கே. நகரில் வெண்ணிலாதாயுமானவன், பெரம்பூர் வெற்றித் தமிழன், கொளத்தூர் சௌந்திரபாண்டியன், வில்லிவாக்கத்தில் ரோஷிணி, திரு.வி.க. நகர் ஜகதீஷ் சந்தர், எழும்பூர் சரண்யா உள்ளிட்டோர் போட்டியிட உள்ளனர்.

கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் அதிகபட்சமாக சிவகங்கை தொகுதியில் 16.81 சதவிகித வாக்குகளை பெற்று அங்கு மட்டுமே நாதக டெபாசிட் பெற்றது. காரைக்குடி சட்டப்பேரவை தொகுதியில் நாதக 14.80 சதவிகித வாக்குகளை பெற்றது. அதனால், சீமான் அங்கு களமிறங்கியுள்ளார்.

## அமைச்சர் கே.என்.நேருவைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்: த.வெ.க. தலைவர் விஜய் அதிரடி அறிக்கை!

தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மீதான ஊழல் புகார்கள் குறித்து தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். நகராட்சித் துறையில் காலியாக இருந்த 2 ஆயிரத்து 538 பணியிடங்களை நிரப்புவதில் 1,020 கோடி ரூபாய் வரை முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை ஆதாரங்களுடன்



சுட்டிக்காட்டியுள்ளதை அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள அமைச்சரை உடனடியாகப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும், இல்லையெனில் அவரே முன்வந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் விஜய் வலியுறுத்தியுள்ளார். ஊழலின் ஊற்றுக் கண்ணாகத் திகழும் திமுக அரசை வரவிருக்கும் தேர்தலில் மக்கள் தூக்கி எறியக் காத்திருப்பதாகவும், முறையான விசாரணை மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் அவர் பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# செய்தி சுருக்கம்

## சென்னை சாலைகளுக்கு இசை மேதைகளின் பெயர்: முதல்வர் திறந்து வைத்தார்!

சென்னையில் இசைத்துறைக்கு அரும்பணியாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் விதமாக, மாநகரின் முக்கிய சாலைகளுக்கு இசை மேதைகளின் பெயர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூட்டி மகிழ்ந்தார். இதன்படி, ஆழ்வார்பேட்டையில் உள்ள டி.டி.கே சாலைக்கு 'இசை மேதை எம்.எஸ். விஸ்வநாதன் சாலை' என்றும், மயிலாப்பூர் பகுதியில் உள்ள சாலைகளுக்குப் புகழ்மிக்க பின்னணிப் பாடகர்களான 'திருச்சி லோகநாதன் சாலை' மற்றும் 'சீர்காழி கோவிந்தராஜன் சாலை' என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழக இசை உலகில் நீங்கா இடம் பிடித்த இம்மூன்று கலைஞர்களின் சாதனைகளைப் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வில், அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பெட்ரோல் பங்க் போலி தடையின்மை சான்றிதழ் மோசடி: சி.பி.ஐ விசாரணை

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெட்ரோல் பங்க் அமைப்பதற்காக சென்னை காவல் ஆணையர் பெயரில் போலி தடையின்மை சான்றிதழ்கள் (NOC) சமர்ப்பிக்கப்பட்ட மோசடி வழக்கில், சி.பி.சி.ஐ.டி (CB-CID) போலீசார் இடைத்தரகர்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பலனடைந்த பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் மற்றும் அதற்குத் துணைபோன பொதுத்துறை நிறுவன அதிகாரிகள் தப்பிவிட்டதாகவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது; இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ் மற்றும் ஆர்.ஹேமலதா அமர்வு, சி.பி.சி.ஐ.டியின் விசாரணை திருப்திகரமாக இல்லை எனக் கூறி, இந்த பெரும் மோசடியின் பின்னணியில் உள்ள முக்கிய புள்ளிகளைக் கண்டறியும் வகையில் வழக்கை உடனடியாக சி.பி.ஐ (CBI) விசாரணைக்கு மாற்றி அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

## கடன் வசூல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு!

தமிழகத்தில் கட்டாயக் கடன் வசூலைத் தடுக்க கடந்த ஜனவரி மாதம் கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின் கீழ், மாநிலத்திலேயே முதல்முறையாக விழுப்புரம் மாவட்டம் திருப்பாலைப்பந்தல் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது; வெண்ணந்தூர் அருகே உள்ள திருப்பாலைப்பந்தல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அப்பாஸ் என்பவர் தனியார் நிதி நிறுவனத்தில் பெற்ற கடனுக்கு இரண்டு மாதங்களாகத் தவணை செலுத்தாததால், அவரது வீட்டிற்குச் சென்ற நிறுவன ஊழியர்கள் தகாத வார்த்தைகளால் பேசி, இருசக்கர வாகனத்தைப் பறிமுதல் செய்ய முயன்று மிரட்டியுள்ளனர். இதனால் மனமுடைந்து அப்பாஸ் தற்கொலைக்கு முயன்ற நிலையில், அவர் அளித்த புகாரின் அடிப்படையில் புதிய சட்டத்தின் கீழ் நிதி நிறுவன மேலாளர் உள்ளிட்ட 3 ஊழியர்கள் மீது காவல்துறையினர் அதிரடியாக வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## 'செல்ஃபி' கூட்டணி திருச்சி விமான நிலையத்தில் அரசியல் தலைவர்கள் சந்திப்பு!

திருச்சி விமான நிலையத்தில் சமீபத்தில் ஒரு சுவாரசியமான சந்திப்பு நிகழ்ந்தது. தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்களான பா.ஜ.க.வின் முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த திருச்சி சிவா எம்.பி. ஆகியோர் தற்செயலாக ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பின் போது, அனைவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் ஒரு 'செல்ஃபி' புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்தப் புகைப்படத்தைத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த திருமாவளவன், இதற்கு "புன்னவைக்கும் புன்னகைகள்" என்று தலைப்பிட்டு, "திருச்சி சிவா எடுத்த செல்ஃபி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகத்தில் பிரதமர் மோடியின் சூறாவளிப் பிரச்சாரம்!

தமிழக சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு, பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் மாதத்தில் மட்டும் மூன்று முறை தமிழகம் வரவுள்ளார்; இதற்கான விரிவான ஏற்பாடுகளை பா.ஜ.க தலைமை தீவிரமாகச் செய்து வரும் நிலையில், மார்ச் 1ஆம் தேதி மதுரையிலும், மார்ச் 7ஆம் தேதி வேலூரிலும், மார்ச் 11ஆம் தேதி திருச்சியிலும் நடைபெறும் பிரம்மாண்ட பொதுக்கூட்டங்களில் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார். அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த முக்கியக் கூட்டங்களில், கூட்டணிக் கட்சித் தலைவர்களான அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க தலைவர் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

## நல்லம்பாக்கம் ஏரியில் ஆண் பிணம் மீட்பு


வண்டலூர் அருகே நல்லம்பாக்கம் ஏரிக்கரையில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் உடல் பிணமாகக் கிடந்ததைக் கண்டு பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்த தாம்பூர் போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்த நபர் யார், அவர் எப்படி இங்கு வந்தார், இது தற்கொலையா அல்லது மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டு ஏரிக்கரையில் வீசப்பட்டாரா என்ற கோணத்தில் போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா (CCTV) காட்சிகளை ஆய்வு செய்து வரும் போலீசார், இந்த மர்ம மரணம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மறைமலை முரசு
தமிழ் வார இதழ்
22 பிப்ரவரி 2026



# மாநில முரசு

## ஏ.ஐ. மாற்றத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது: பிரதமர் மோடி





டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ள 'ஏ.ஐ. தாக்க உச்சி மாநாட்டை' முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். உலக நாடுகளை ஒன்றிணைத்து ஏ.ஐ. தொழில்நுட்பம் குறித்து விவாதிக்க இந்தியா இந்த மாநாட்டை நடத்துகிறது. கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் நிர்வாகம் போன்ற துறைகளில் ஏ.ஐ. ஏற்படுத்தி வரும் மாற்றங்கள் குறித்து இந்த உச்சி மாநாடு விரிவாக விவாதிக்கும் என்றும், இது ஒரு பொறுப்பான மற்றும் முற்போக்கான எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் 140 கோடி மக்களின் பங்களிப்புடன், டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு முதல் ஸ்டார்ட்அப் வரை ஏ.ஐ. துறையில் நமது நாடு முன்னணியில் இருப்பது பெருமைக்குரியது எனப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## சபரிமலையில் பெண்கள் வழிபாடு - உச்ச நீதிமன்ற தீர்ப்பு?



கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் அனைத்து வயதுப் பெண்களும் தடையின்றிச் சென்று வழிபாடு நடத்தலாம் என்ற 2018ஆம் ஆண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு மனுக்கள், தற்போது உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன் இறுதி விசாரணைக்கு வந்துள்ளன. பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த ஆன்மீக மற்றும் சட்டப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், வரும் ஏப்ரல் 7ஆம் தேதி முதல் வாதங்கள் தொடங்கப்படும் என நீதிமன்றம் கால அட்டவணையை வெளியிட்டுள்ளது. மத ரீதியான மரபுகளுக்கும், பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் அரசியல் சாசன உரிமைகளுக்கும் இடையிலான இந்த மெல்லிய கோட்டை நீதித்துறை எவ்வாறு கையாளப்போகிறது என்பதே தற்போது நாடு முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 22ஆம் தேதியுடன் இந்த இறுதி விசாரணை நிறைவடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கோடிக்கணக்கான ஐயப்ப பக்தர்களின் உணர்வுகளையும், பெண்களின் சம உரிமைப் போராட்டத்தையும் சமன் செய்யும் ஒரு தீர்க்கமான முடிவை நோக்கி ஒட்டுமொத்த தேசமும் காத்திருக்கிறது.



# வெளிநாட்டு முரசு

## இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூ கைது



லண்டன்: சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ஜெப்ரி எப்ஸ்டீன் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை வழக்கில், இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் விண்ட்சர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்து மறைந்த ராணி இரண்டாம் எலிசபெத்தின் மகனும், தற்போதைய மன்னர் மூன்றாம் சார்லஸின் சகோதரருமான இவர் மீது, அமெரிக்காவில் சிறுமிகளைக் கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீனுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

எப்ஸ்டீன் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவருடன் தொடர்பிலிருந்த பல்வேறு நாட்டுத் தலைவர்கள் மற்றும் பிரபலங்களின் ரகசிய ஆவணங்கள் மற்றும் வீடியோக்கள் வெளியாகி சர்வதேச அளவில் அதிர்வலைகளை உருவாக்கின. இந்த நிலையில், கடந்த 2010ம் ஆண்டு எப்ஸ்டீனுடன் இளவரசர் ஆண்ட்ரூ மேற்கொண்ட ரகசிய மின்னஞ்சல் தொடர்புகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில், அவர் பதவியில் இருந்த காலத்தில் தவறான நடத்தையில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு லண்டனில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் உலக நாடுகளிடையே பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு: டிரம்ப் வரிகளுக்குத் தடை!





அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது பதவிக்காலத்தில் பல்வேறு நாடுகளின் இறக்குமதிப் பொருட்களின் மீது விதித்த சர்ச்சைக்குரிய 'பரஸ்பர வரி' (Reciprocal Tariffs) விதிப்புகளை ரத்து செய்து அமெரிக்க உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது; சர்வதேச வர்த்தகக் கொள்கைகளில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்த வழக்கில், 63 என்ற நீதிபதிகள் கணக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில், வரிகளை விதிக்கும் முழுமையான அதிகாரம் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்திற்கு (Congress) மட்டுமே உள்ளதாகவும், நிர்வாகப் பிரிவிற்கு (Executive Branch) தன்னிச்சையாக இதில் முடிவெடுக்க நேரடி அதிகாரம் இல்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிரம்பின் இந்த வரிவிதிப்புகள் உலகளாவிய வர்த்தகப் போருக்கு வித்திட்டிருந்த நிலையில், தற்போது வெளியாகியுள்ள இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு, அமெரிக்காவின் வர்த்தகக் கூட்டாளி நாடுகளுக்கும், சர்வதேச சந்தைகளுக்கும் பெரும் நிம்மதியை அளித்துள்ளதுடன், வருங்காலங்களில் அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளில் மிகப்பெரிய மாற்றங்களையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்தும் எனப் பொருளாதார வல்லுநர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

## வங்கதேசத்தின் புதிய பிரதமராக தாரிக் ரஹ்மான் பதவியேற்பு



வங்கதேசத்தில் சமீபகாலமாக நிலவி வந்த பல்வேறு அரசியல் மாற்றங்கள் மற்றும் அதிரடித் திருப்புமுனைகளைத் தொடர்ந்து, அந்நாட்டின் புதிய பிரதமராக தாரிக் ரஹ்மான் கடந்த பிப்ரவரி 15 ஆம் தேதியன்று தலைநகர் டாக்காவில் முறைப்படி பதவியேற்றுக் கொண்டார்; அண்டை நாடான வங்கதேசத்தில் நடைபெற்ற இந்த மிக முக்கியப் பதவியேற்பு விழாவில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சார்பாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு புதிய பிரதமருக்கு இந்தியாவின் சிறப்பான வாழ்த்துகளைத் தெரிவித்தார். பதவியேற்புக்குப் பின்னர் உரையாற்றிய புதிய பிரதமர் தாரிக் ரஹ்மான், இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுடனான தங்களது வெளியுறவுக் கொள்கை மற்றும் இருதரப்பு நட்புறவானது எந்தவொரு தலையீடும் இன்றி 'பரஸ்பர மரியாதையின்' அடிப்படையிலேயே தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் திட்டவட்டமாக உறுதி அளித்துள்ளார்.



## நீதியரசரின் நற்சிந்தனைகள்

எண்ணமும் செயலும் உண்மையாக இருந்தால் உயர்வுகள் தன்னால் நம்மை வந்து சேரும்

If the thoughts and actions are true and good, the position will come automatically.

நீதியரசர் – மு.கற்பக விநாயகம்

## வாரம் ஒரு திருக்குறள்



### திருக்குறள்-அதிகாரம் : 5

**இல்வாழ்க்கை**

குறள்: 45

அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயமும் அது

பொருள் :

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

## வரி விளம்பரம்

**செங்கல்பட்டு மகேந்திரா வேல்ட் சிட்டி குண்ணவாகம் பைரவர் திருக்கோயில் அருகாமையில் 600ச.அடி - 12.60 லட்சம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இடம் பார்வையிடலாம்.**

**செங்கல்பட்டு மாவட்டம்,செட்டிபுண்ணியம் கிராமம், போர்டு கம்பெனி அருகில் சர்வேஎண்-366A/2B1B வீட்டு மனை 0.65 ஏக்கர் நிலம் விற்பனைக்கு உள்ளது. சதுர அடி ரூ.1400/- மட்டுமே.**

**தொடர்புக்கு : 7200073980 / 044-61381709**



# சட்டம் முரசு

## வணிக நோக்கில் தயாரிக்கப்படும் வன்முறைக்காட்சிகள் நிறைந்த வளர்ந்த நடிகர்களின் திரைப்படங்களும் வழக்காடுமன்றத்தீர்ப்பும்

அனைவருக்கும் வணக்கம்,

சமுதாயத்தில் பெரும் பாதிப்பை நிகழ்த்திவிடும் சக்தி பொதுவாக திரைப்படங்களுக்கும் உண்டு என்ற கூற்று அனைவரும் ஏற்கத்தகுந்த ஒன்றே. இத்தகைய நிலையில் இன்றைய சமுதாயம் மொபைல் போன்களின் பக்கம் பெரிதும் சாய்ந்துவிட்ட நிலையில், அனைத்துத்தகவல்களையும் மிகவும் துரிதமாகவும் எளிதாகவும் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வசதி மிகுந்துவிட்டது. இன்றைய நாட்களில் தியேட்டர்களில் வெளிவரும் திரைப்படங்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துவிட்டது எனினும் சில முன்னனி கதாநாயகர்களின் திரைப்படங்கள் ஆண்டுக்கு ஒன்றாவது வெளிவந்து சமுதாயத்தில் ஒரு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தும் ஒன்றாக மாறிவிடுகிறது. அறிவியல் சார்ந்த அனைத்துத் தொழில்நுட்பங்களும் வளர்ந்துவிட்ட நிலையில் திரைப்படங்களில் அரங்கேற்றப்படும் வன்முறைக்காட்சிகளும் வரையறைக்குட்படாத வகையில் மிகுந்தே காணப்படுகிறது. சாதாரண மனிதனால் சீரணித்துக்கொள்ள முடியாத அளவிற்கு அரங்கில் அரங்கேற்றப்படும் அசாதாரமண கொலைகள் காண்போரை முகம் சுழிக்கச்செய்கிறது. இத்தகைய படங்களில் நடிக்கும் கதாநாயகர்கள் வெளியில் தங்களை சமுதாய அக்கறை கொண்டவர்கள் போல் காட்டிக்ககொண்டாலும், வருமானத்திற்காக எத்தகைய வன்முறைக்காட்சிகளையும் திரையில்தோன்றச் செய்ய தயங்குவதில்லை. இத்தகைய வகையில் 18 வயதிற்குட்பட்டவர்களின் மனநலத்தை பாதிக்கும் வகையில் உள்ள திரைப்படங்களுக்கு திரைப்பட தணிக்கைக்குழு ஏ சர்ட்டிபிகேட் வழங்குவது வழக்கம். இவ்வகையில் தற்சமயம் திரையில் தோன்றிய ஒரு திரைப்படத்திற்கு வழங்கப்பட்ட ஏ சர்ட்டிபிகேட்டை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்குப்பற்றி இப்பதிவில் காண உள்ளோம்.

வழக்கின் சாரம் தற்சமயம் வெளிவந்த கூலி திரைப்படத்திற்கு வழங்கப்பட்ட ஏ சர்ட்டிபிகேட்டுக்கு மாற்றாக யு ஏ சர்ட்டிபிகேட் வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டது. இத்திரைப்படத்திற்கு வன்முறைக்காட்சிகள் மிகுந்திருப்பதால் ஏ சர்ட்டிபிகேட் வழங்கபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் திரைப்படக்குழுவினர் அப்படத்தில் உள்ள பெரும்பாலான வன்முறைக்காட்சிகள் சமுதாய நலன் கருதி நீக்கப்பட்டுவிட்டதாகவும் எனவே தற்சமயம் அதற்கு யு ஏ சான்றிதழ் வழங்கலாம் எனவும் கோரிக்கைவிடுக்கப்பட்டது. இவ்வழக்கினை விசாரித்தறிந்த மாண்புமிகு நீதியரசர் அவர்கள் திரைப்படக்குழுவினர் திரைப்படத் தணிக்கைக்குழுவினர் வழங்கிய ஏ சர்ட்டிபிகேட்டுடன் திரைப்படத்தை திரையிட்டுவிட்டு இவ்வளவுகாலம் கழித்து ஏ சர்ட்டிபிகேட்டை மாற்றக் கோரிக்கை வைப்பது ஏற்கத்தகுந்தல்ல என்றவாறு கூறி மறுப்புத்தெரிவிக்கப்பட்டுவிட்டது. வருமானத்துடன் சமுதாய அக்கறையையும் சற்றே எண்ணிப்பார்ப்பவர்களே சமுதாய நலன் விரும்பிகள் என்றால் மிகையாகுமோ? சமுதாய அக்கறை கொள்வோம் சலனமற்ற வாழ்வு வாழ்ந்திடுவோம்.

சட்டம் அறிவோம்! சிறப்புடன் வாழ்வோம்!

**M.sudharani**
**Advocate**
**Madurai Bench Madras High Court**

## உச்ச நீதிமன்றத்தில் தமிழ் வழக்கறிஞர்கள் இலக்கிய கருத்தரங்கம்!



தமிழ் வழக்கறிஞர்கள் இலக்கிய கழகம் உச்ச நீதிமன்றத்தின் 24 ஆவது கருத்தரங்கம் 20.02.2026 மாலை 4:30 மணி முதல் உச்சநீதிமன்றத்தின் எதிர்ப்புறம் உள்ள ஐ.எஸ்.ஐ.ல் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதில் பாரத குடியரசின் கூடுதல் முதன்மை வழக்கறிஞர் மற்றும் மூத்த வழக்கறிஞர் ஆகிய திரு.என் வெங்கட்ராமன் அவர்கள் பகவத் கீதை ஆன்மா என்றால் என்ன என்ற தலைப்பில் சிறப்பாக உரையாற்றினார் அவருடன் பதிவுரு வழக்கறிஞர் திரு .பா வினோத் கண்ணா அவர்களும் தமிழில் உள்ள சட்ட கூறுகளை பற்றி உரையாற்றினார் அதனை தொடர்ந்து கழகத்தின் தலைவர் மேனாள் நீதியரசர் மாண்புமிகு கற்பக விநாயகம் வாழ்த்துரை வழங்கினார். விழாவை கழகத்தின் உறுப்பினர்கள் செயலாளர் திரு.அறிவழகன், இணை செயலாளர் திருமதி.சுமதி, பொருளாளர் அரவிந்த், துணை பொருளாளர் சுப்பிரமணியம் மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர் ஜெயம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# வேலைவாய்ப்பு முரசு




1. பி.எஸ்.என்.எல் (BSNL) நிறுவனத்தில் மேலாளர் பணி மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்லில் Senior Executive Trainee (SET) பணிக்கான 120 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

* **கல்வித்தகுதி :** B.E / B.Tech / CA / CMA.
* **விண்ணப்பிக்க கடைசி நாள் :** மார்ச் 07, 2026.
* **இணையதளம் :** www.bsnl.co.in



2. சென்னை துறைமுக ஆணையத்தில் (Chennai Port Authority) வேலை சென்னை துறைமுகத்தில் Executive Engineer பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

* **கல்வித்தகுதி:** பட்டப்படிப்பு அல்லது முதுநிலைப் பட்டப்படிப்பு.
* **சம்பளம்:** ரூ.1,60,000/ வரை.
* **விண்ணப்பிக்க கடைசி நாள்:** மார்ச் 19, 2026.




3. யந்திரா இந்தியா லிமிடெட் (Yantra India) சென்னை - திருச்சி மத்திய அரசின் இந்த நிறுவனத்தில் ஐடிஐ மற்றும் 10ஆம் வகுப்பு முடித்தவர்களுக்காக 3,979 அப்ரெண்டீஸ் (பயிற்சிப் பணியிடங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* **தேர்வு முறை:** மதிப்பெண்கள் அடிப்படையில் நேரடித் தேர்வு.
* **விண்ணப்பிக்க கடைசி நாள் :** மார்ச் 03, 2026.

**மறைமலை முரசு தமிழ் வார இதழ் வாரந்தோறும் வாசல் தோறும் அஞ்சல் மூலமாக கிடைத்திட மூன்றாம் ஆண்டு வருட சந்தா ரூபாய் 260 செலுத்தி பெற்றிடுவீர்.**

**G - Pay : 72000 73980**

# வாக்கர் வாய்ஸ்



## 5,000 ரூபாய் கனவு... மாவட்டத்திற்கு 500 பேரின் குமுறல்!

**அபி:** என்ன அண்ணாச்சி, இன்னைக்கு நடைப்பயிற்சியில ரொம்பவே சீரியஸா எதையோ கணக்கு போட்டுட்டு வர்றீங்க?

**அண்ணாச்சி:** கணக்கு இல்ல தம்பி அபி, இது மக்களின் கண்ணீர் கணக்கு! ஏப்ரல் 2025ல இருந்து புது ரேஷன் கார்டுக்காக விண்ணப்பிச்சு காத்துக்கிட்டு இருந்தாங்களே, அவங்க நிலைமையை யோசிச்சுப் பார்த்தியா?

**அபி:** ஆமாண்ணா, அந்த 5,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை கொடுத்த பிறகுதானே மொத்தமா எல்லா கார்டையும் ரிலீஸ் பண்ணாங்க?

**அண்ணாச்சி:** அங்கதான் தம்பி பெரிய இடி விழுந்திருக்கு! ஒரு மாவட்டத்துக்கு ஆவரேஜா 500 பேருக்கு மேல புது கார்டு கொடுத்திருக்காங்க. தமிழகம் முழுக்க கணக்கு போட்டா எத்தனை குடும்பங்கள் வரும்னு பாரு!

**அபி:** ஆமாண்ணா, 38 மாவட்டத்துக்கும் கணக்கு போட்டா கிட்டத்தட்ட 19,000லிருந்து 20,000 குடும்பங்கள் வரை வருமே!

**அண்ணாச்சி:** கரெக்டா சொன்ன தம்பி. இந்த 20,000 குடும்பங்களுக்கும் அந்த 5,000 ரூபாய் போய்ச் சேரல. காரணம் என்னன்னா, இவங்களுக்கு கார்டு வர்றதுக்கு முன்னாடியே விண்ணப்பம் வாங்குற வேலையை முடிச்சுட்டாங்க. கார்டு இல்லாம இவங்க விண்ணப்பிக்கவே முடியாம போயிருச்சு.

**அபி:** அப்போ அந்த 500 குடும்பங்களுக்கு இது பெரிய ஏமாற்றம்தானே அண்ணாச்சி? மத்தவங்களுக்கு பணம் வரும்போது, இவங்களுக்கு மட்டும் கார்டு கையில இருந்தும் வாய்ப்பு இல்லாம போயிருக்கே?

**அண்ணாச்சி:** அதான் தம்பி வருத்தமே! அரசாங்கம் கார்டு கொடுக்கத் தாமதம் பண்ணுனதுனால, இப்போ இந்தத் திட்டத்துல இணைய முடியாம தவிக்கிறாங்க. "கார்டும் கொடுத்தாச்சு... ஆனா உரிமைத் தொகையும் கிடைக்கல"ங்கிறதுதான் இப்போதைய நிலைமை.

**அபி:** இது ரொம்ப அநியாயம்ண்ணா. மாவட்டத்துக்கு அந்த 500 குடும்பங்களுக்கும் தனி முகாம் வச்சாவது விண்ணப்பம் வாங்கணும்.

**அண்ணாச்சி:** கண்டிப்பா! நம்ம மறைமலை முரசு மூலமா இதை ஒரு பெரிய கோரிக்கையா கொண்டு போவோம். "மாவட்ட வாரியா விடுபட்ட இந்த 500 குடும்பங்களுக்கும் உடனடியாக வாய்ப்பு கொடுங்க"ன்னு உரக்கச் சொல்லுவோம்!

**அபி:** நிச்சயமா அண்ணாச்சி, பாதிக்கப்பட்ட மக்களோட இந்த நியாயமான குரல் அரசு காதுல விழணும்.

# திரை விமர்சனம்





அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தால் உயிருடன் இருப்பவர்களே ஆவணங்களில் ‘இறந்தவர்களாக’ மாற்றப்படும் ஒரு சாமானியனின் வலியை, ரத்தமும் சதையுமாகப் பதிவு செய்திருக்கிறது இந்த ‘மை லார்ட்’. இயக்குநர் ராஜு முருகன் தனது கூர்மையான வசனங்களால் சமூகத்தின் அதிகார அடுக்குகளைத் தட்டி கேட்க, நாயகன் சசிகுமார் ஒரு எளிய மனிதனின் போராட்டத்தை மிக எதார்த்தமாகத் திரையில் கடத்தியிருக்கிறார். ஷான் ரோல்டனின் ஆன்மாவைக் கரைக்கும் இசையும், வறுமையின் நிறத்தைப் பிரதிபலிக்கும் ஒளிப்பதிவும் படத்திற்குப் பெரும் பலம் சேர்க்கின்றன. நீதிமன்றக் காட்சிகள் சில இடங்களில் நாடகத் தன்மையுடன் தெரிந்தாலும், ஒரு சாமானியன் சட்டத்தின் கதவுகளைத் தட்டும் போது சந்திக்கும் சவால்களை இத்திரைப்படம் நேர்மையாகப் பேசியிருக்கிறது. மொத்தத்தில், சமூகத்தின் மனசாட்சியை உலுக்கும் இந்த ‘மை லார்ட்’, ஒவ்வொரு குடிமகனும் பார்க்க வேண்டிய ஒரு தரமான படைப்பு.

# விளையாட்டு முரசு




ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிரணி, அடிலெய்டில் நடைபெற்ற 3வது மற்றும் கடைசி டி20 போட்டியில் 17 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி, 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 21 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது; கடந்த 10 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி டி20 தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும். டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி, தொடக்க வீராங்கனை ஷ◌ஃபாலி வர்மா (7) விரைவில் ஆட்டமிழந்தாலும், ஸ்மிருதி மந்தனா (55 பந்துகளில் 82 ரன்கள்) மற்றும் ஜெமிமா ரோட்ரிக்ஸ் (46 பந்துகளில் 59 ரன்கள்) ஆகியோரின் அபாரமான அரைசதங்கள் மூலம் 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 176 ரன்கள் குவித்தது (ஆஸ்திரேலியா தரப்பில் அன்னாபெல் சதர்லேண்ட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்). பின்னர் 177 ரன்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியில், அன்னாபெல் சதர்லேண்ட் தனித்துப் போராடி 45 பந்துகளில் 57 ரன்கள் எடுத்தபோதிலும், மற்ற வீராங்கனைகளான ஜார்ஜியா வோல் (10), பெத் மூனி (6), எல்லிஸ் பெர்ரி (1), ஃபோப் லிட்ச்ஃபீல்டு (26) ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர். இந்திய அணித் தரப்பில் துல்லியமாகப் பந்துவீசிய ஸ்ரேயங்கா பாட்டில் மற்றும் ஸ்ரீ சரணி தலா 3 விக்கெட்டுகளையும், அருந்ததி ரெட்டி 2 விக்கெட்டுகளையும், ரேணுகா சிங் தாக்குர் 1 விக்கெட்டினையும் கைப்பற்றி அசத்தியதால், ஆஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 159 ரன்கள் மட்டுமே எடுத்து வீழ்ந்தது; இந்த வரலாற்று வெற்றியில் முக்கியப் பங்காற்றிய ஸ்மிருதி மந்தனாவுக்கு ஆட்ட நாயகி விருது வழங்கப்பட்டது.




தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய முன்னாள் நிர்வாகப் பொறியாளர் திரு. முருகேசன் M.E. திருமதி. கமலம் B.Com., M.A. தம்பதியினரின் புதல்வர் M.யோகேஸ்வர் Ph.D. M.கல்பனா MBA ஆகியோரை மறைமலைநகர் ராணி பேலஸில் வாழ்த்திய ‘மறைமலை முரசு’ ஆசிரியர் திரு. எஸ். ஞானவேல்.

# ஆன்மிக முரசு




முக்தி தரும் ஏழு நகரங்களில் முதன்மையான காஞ்சி மாநகரில், அன்னை காமாட்சி தேவி தவம் புரிந்து இறைவனுடன் இணைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமே காஞ்சி காமாட்சி அம்மன் கோவில். சிவபெருமானின் திருக்கண்களை விளையாட்டாக மறைத்ததால் ஏற்பட்ட இருள் நீங்கவும், உலக நன்மைக்காகவும் அன்னை மணலால் லிங்கம் செய்து வழிபட்ட தலம் இது. 51 சக்தி பீடங்களில் அம்மனின் நாபி (தொப்புள்) பகுதி விழுந்த ‘காமகோடி பீடமாக’ போற்றப்படும் இத்தலத்தில், ஆதிசங்கரர் நிறுவிய ஸ்ரீசக்ரமே பிரதானமாக வழிபடப்படுகிறது. காஞ்சிபுரத்தில் உள்ள அனைத்து சிவாலயங்களுக்கும் பொதுவான சக்தியாக விளங்கும் அன்னை, இங்கே உக்ர ரூபம் நீங்கி சாந்த சொரூபியாக அமர்ந்து அருள்பாலிக்கிறாள். மாசி மகப் பெருவிழா, தங்கத் தேர் உலா மற்றும் நவராத்திரி போன்ற விசேஷ நாட்களில் அன்னை வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளிப்பது இக்கோவிலின் தனிச்சிறப்பாகும்.






* பேராற்றல்: நாம் காணும் இந்தப் பிரபஞ்சம், கோடிக்கணக்கான விண் மீன்கள், சுழலும் கோள்கள் என அனைத்தையும் ஒரு கட்டுக்கோப்பிற்குள் இயங்கச் செய்யும் வல்லமை அந்த ஏக இறைவனுக்கே உரியது.

* அபயம்: வாழ்வில் சோதனைகளும் வேதனைகளும் நம்மைச் சூழ்ந்து கொள்ளும் போது, “எனது துன்பங்களை விட என் இறைவன் பெரியவன்” என்ற எண்ணம் ஒருவருக்கு அசைக்க முடியாத தன்னம்பிக்கையைத் தருகிறது.

* சமத்துவம்: உலகைப் படைத்தவன் முன்னால் அரசனும் ஆண்டியும் ஒருவரே. “இறைவன் பெரியவன்” என்ற முழக்கம் மனிதர்களிடையே இருக்கும் ஆணவத்தை அழித்து, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போதிக்கிறது.

**டிஜிட்டல் வடிவில் நமது மறைமலை முரசு:** இனி உங்கள் விரல் நுனியில்! செய்தி உலகில் தனித்துவமான தடம் பதித்து வரும் நமது மறைமலை முரசு தமிழ் வார இதழ், காலத்தின் தேவைக்கேற்ப புதிய பரிணாமம் எடுத்துள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அச்சு வடிவில் வெளிவரும் நமது இதழின் அனைத்து செய்திகளையும், கட்டுரைகளையும் இப்போது நீங்கள் உலகின் எந்த மூலையில் இருந்தும் மிக எளிதாக வாசிக்கலாம். துல்லியமான செய்திகள், ஆழமான அரசியல் அலசல்கள் மற்றும் மக்கள் நலன் சார்ந்த கட்டுரைகள் என அனைத்தும் அடங்கிய நமது இதழின் அதிகாரப்பூர்வ ஈபேப்பர் (e-Paper) பதிப்பைக் காண **www.maraimalaimurasu.in** என்ற இணையதள முகவரியைப் பாருங்கள். அச்சுப் பதிப்பின் அதே தரத்தோடும், தெளிவான வடிவமைப்போடும் உங்கள் மொபைல் அல்லது கணினியிலேயே வாசிக்கும் வசதியை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். உண்மையான செய்திகளின் உரத்த குரலாக ஒலிக்கும் மறைமலை முரசுடன் இணைந்திருங்கள்!

## மறைமலை நகரில் புத்தகக் கண்காட்சி



**“மறைமலைநகர் நகராட்சி சமுதாயக் கூடத்தில், செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் செங்கை பாரதியார் மன்றம் ஆகியவை இணைந்து நடத்தும் 7வது செங்கை புத்தகத் திருவிழாவினை, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், நகராட்சி மன்றத் தலைவர் திரு. ஜெ. சண்முகம் மற்றும் நகராட்சி ஆணையாளர் திரு. எச். ரமேஷ் ஆகியோர் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்து, ஒரு வாரம் நடைபெறவுள்ள புத்தக அரங்குகளைப் பார்வையிட்ட போது எடுத்த படம்.”**

# சமையல் முரசு




**தேவையான பொருட்கள்**

வாழைக்காய் – 2, வெங்காயம் – ஒன்று, பூண்டு – 8 பற்கள், இஞ்சி – ஒரு இன்ச், பச்சை மிளகாய் – 3 காய்ந்த மிளகாய் – 3, கருவேப்பிலை – 2, கொத்து சோம்பு – 1 1/2 டீஸ்பூன், துருவிய தேங்காய் – ஒரு கப், பொட்டுக்கடலை – ஒரு கப், உப்பு – தேவையான அளவு, மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன் கொத்தமல்லி – ஒரு கைப்பிடி அளவு, எண்ணெய் பொரிப்பதற்கு தேவையான அளவு.

**செய்முறை**

முதலில் ஒரு குக்கரை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இரண்டு வாழைக்காயை தோலுடன் அதன் காம்பையும் தூர்ப்பகுதியையும் மட்டும் நீக்கிவிட்டு குக்கருக்குள் வைத்து கால் ஸ்பூன் அளவிற்கு மட்டும் உப்பை சேர்த்து அது மூழ்கும் அளவு தண்ணீரை ஊற்றி குக்கர் மூடியை மூடி அடுப்பில் வைத்து விட வேண்டும். குக்கர் நான்கு விசில் வந்ததும் அடுப்பில் இருந்து இறக்கி வைத்துக் கொள்ளுங்கள். விசில் நீங்கியதும் குக்கரை திறந்து வாழைக்காயை எடுத்து நன்றாக ஆற வைத்துக் கொள்ளுங்கள். வாழைக்காய் ஆறியதும் அதன் தோலை நீக்கிவிட்டு உள்ளே இருக்கக்கூடிய வாழைக்காயை நன்றாக மசித்து கொள்ளுங்கள். இப்பொழுது அடுப்பில் ஒரு கடாயை வைத்து இரண்டு டேபிள் ஸ்பூன் அளவிற்கு எண்ணெய் ஊற்ற வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் அதில் ஒன்று இரண்டாக நறுக்கி வைத்திருக்கும் வெங்காயம், பூண்டு, இஞ்சி, பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய், கருவேப்பிலை இவற்றை சேர்த்து நன்றாக வதக்க வேண்டும். இவை அனைத்தும் நன்றாக வதங்கியதும் துருவிய தேங்காய், பொட்டுக்கடலை, சோம்பு, தேவையான அளவு உப்பு, மஞ்சள் தூள் போன்றவற்றைப் போட்டு நன்றாக வதக்க வேண்டும். தேங்காயும் நன்றாக வதங்கியதும் கொத்தமல்லியையும் தூவி ஒரு முறை நன்றாக கலந்து விட்டு ஆற வைத்துக் கொள்ளுங்கள். நன்றாக ஆரிய பிறகு இதை மிக்ஸி ஜாரில் சேர்த்து தண்ணீர் ஊற்றாமல் அரைத்துக் கொள்ளுங்கள். அரைத்த இந்த விழுதை நாம் ஏற்கனவே மசித்து வைத்திருக்கும் வாழைக்காய் உடன் சேர்த்து நன்றாக பிணைய வேண்டும். நன்றாக பிணைந்த பிறகு இதை கோலா உருண்டை அளவிற்கு உருட்டி தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அடுப்பில் ஒரு கடாயை வைத்து அதில் கோலா உருண்டையை பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்ற வேண்டும். எண்ணெய் நன்றாக காய்ந்ததும் அடுப்பை மிதமான தீயில் வைத்து நாம் உருட்டி வைத்திருக்கும் உருண்டைகளை எண்ணெயில் சேர்க்க வேண்டும். உருண்டைகள் நன்றாக பொன்னிறமாக சிவந்த பிறகு அதை எடுத்து தட்டில் வைத்து விடலாம். மிகவும் சுவையான எளிமையான அருமையான வாழைக்காய் கோலா உருண்டை தயாராகி விட்டது.

# அழகு முரசு

## பருக்களைப் போக்கும் ஜூஸ்



பருக்கள் உண்டாவதற்கு சருமத்தில் ஏற்படும் மாசுக்கள், இன்ஃபிளமேஷன் உள்ளிட்டவை முக்கியக் காரணமாகும். அதனால் அவற்றை சரிசெய்ய வேண்டும் என்றால் ஆன்டி இன்ஃபிளமேட்டரி பண்புகள் கொண்ட ஜூஸாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

அரை வெள்ளரிக்காய், அரை எலுமிச்சை பழம், ஒரு துண்டு இஞ்சி, 10 துளசி இலைகள்.

மேலே குறிப்பிட்டவற்றில் எலுமிச்சை பழத்தை தவிர மற்ற எல்லா பொருள்களையும் சேர்த்து, தண்ணீர் விட்டு அரைத்து ஜூஸாக்கி பின்பு அதில் எலுமிச்சை சாறு கலந்து குடியுங்கள்.

**MARAIMALAI MURASU** Tamil Weekly Owned and Published by **S. GNANAVEL** from No. 112, LIG, NH-1, Dr Ambedkar Street, Maraimalai Nagar, Chengalpattu - 603209 and Printed by Him at 19/1&21/2, Kitabath Khan Bhadur Street, Ellies Road, Chennai -600002.
**Editor. S. GNANAVEL Cell : 94441 12294, E-Mail ID : maraimalaimurasu@gmail.com / www.maraimalaimurasu.in**